தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

26.02.2013 A.M

## பயிர் சேத நிவாரணத் தொகை ரூ.18.22 கோடி ஒதுக்கீடு: அமைச்சர்

கடலூர் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பயிர் சேத நிவாரணத் தொகை வழங்க ரூ.18.22 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தமிழக சுற்றுச்சூழல்துறை அமைச்சர் எம்.சி.சம்பத் தெரிவித்தார்.

காட்டுமன்னார்கோவில் அருகே உள்ள திருநாரையூர் கிராமத்தில் காவிரி டெல்டா பாசன விவசாயிகளுக்கு பயிர் சேத நிவாரணத் தொகை மற்றும் காவிரி டெல்டா சிறப்பு கூடுதல் நிவாரணம் வழங்கும் விழா திங்கள்கிழமை நடைபெற்றது.

விழாவில் 226 விவசாயிகளுக்கு நிவாரணத் தொகையை வழங்கி அமைச்சர் பேசியது: காட்டுமன்னார்கோவில் வட்டத்தில் 20 கிராமங்களைச் சேர்ந்த 331 விவசாயிகளுக்கும், சிதம்பரம் வட்டத்தில் 31 கிராமங்களைச் சேர்ந்த 7284 விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்கப்படும்.

கடலூர் மாவட்டத்தில் 51 கிராமங்களைச் சேர்ந்த 7,615 விவசாயிகளின் 12,152 ஏக்கர் நிலங்களுக்கும் நிவாரணத் தொகையாக ரூ.18.22 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என அமைச்சர் எம்.சி.சம்பத் தெரிவித்தார்.

விழாவுக்கு, மாவட்ட ஆட்சியர் ஆர்.கிர்லோஷ்குமார் தலைமை வகித்து பேசியது: இதுவரை கடலூர் மாவட்டத்தில் 2924 விவசாயிகளுக்கு ரூ.6.43 கோடி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. கடந்த பிப்ரவரி 23-ம் தேதி முதல் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நிவாரணத் தொகை வழங்கும் பணி நடைபெற்று வருகிறது.

எஞ்சியுள்ள விவசாயிகளுக்கும் நிவாரணத் தொகை வழங்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது என ஆட்சியர் கிர்லோஷ்குமார் தெரிவித்தார்.

விழாவில், கடலூர் மேற்கு மாவட்ட அதிமுக செயலர் வி.கே.மாரிமுத்து, காட்டுமன்னார்கோவில் சட்டப்பேரவை உறுப்பினர் நாக.முருகுமாறன், புவனகிரி சட்டப்பேரவை உறுப்பினர் செல்வி

ராமஜெயம், உதவிஆட்சியர் எல்.சுப்பிரமணியன், குமராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் கே.ஏ.பாண்டியன், இணைப் பதிவாளர் ரேணுகாம்பாள், தனிஅலுவலர் பிருந்தா, ஊராட்சி மன்றத் தலைவர் தியாகராஜன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

மரம் நடுவிழா...

கடலூர் : மரம் வளர்ப்பில் ஆசிரியர்கள், மாணவர்கள் பங்களிப்பு மிகவும் அவசியம் என சுற்றுச்சூழல் மற்றும் மாசுக்கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் அமைச்சர் எம்.சி.சம்பத் பேசினார்.

வனத்துறை, சுற்றுச்சூழல் மற்றும் மாசுக்கட்டுப்பாட்டுத் துறை இணைந்து முதல்வர் ஜெயலலிதா பிறந்தநாளை முன்னிட்டு தமிழகம் முழுவதும் 65 லட்சம் மரக்கன்றுகளை நடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

கடலூர் மாவட்டத்தில் 2.3 லட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டம் வனத்துறை மூலம் திங்கள்கிழமை தொடங்கப்பட்டது.

கடலூர் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற விழாவுக்கு, மாவட்ட ஆட்சியர் ரா.கிர்லோஷ்குமார் தலைமை வகித்தார்.

கடலூர் மாவட்டத்தில் மரக்கன்றுகள் நடும் திட்டத்தை தொடங்கி வைத்தும் கடந்த 2009 முதல் 2011 வரையில் ஏரித்தோட்டங்களில் ஏல வருவாயில் ஊராட்சிகளுக்கு பங்கீட்டுத் தொகையாக 41 ஊராட்சித் தலைவர்களுக்கு ரூ.56.71 லட்சத்தை அமைச்சர் எம்.சி.சம்பத் வழங்கினார்.

இதில் அமைச்சர் எம்.சி. சம்பத் பேசுகையில், "தமிழக முதல்வர் பிறந்தநாளை முன்னிட்டு தமிழகம் முழுவதும் 65 லட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டத்துக்காக சுற்றுச்சூழல் மாசுக்கட்டுப்பாட்டுத் துறை மூலம் ரூ. 30 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வனத்துறை மூலம் பணிகள் நடந்து வருகின்றன.

கடலூர் மாவட்டத்தில் பள்ளி கல்லூரிகள் பொது இடங்களில் மரக்கன்றுகள் நட்டு வளர்க்கப்படும். இந்த மரங்கள் நாளைய தலைமுறைக்கு நிழல் தருவதோடு பசுமையான தமிழகத்தை உருவாக்கித் தரும்.

இந்த பணியில் வனத்துறையோடு இணைந்து மாணவர்களும், ஆசிரியர்களும் ஆர்வமுடன் மரக்கன்றுகளையெல்லாம் மரமாக்கி காட்ட வேண்டும்.

மாவட்ட வனஅலுவலர் தியாகராசன் வரவேற்றார். மாவட்ட ஊராட்சித் தலைவர் மல்லிகா வைத்தியலிங்கம், நகராட்சித் தலைவர் கே.சி.சுப்ரமணியம், துணைத் தலைவர் சி.ஜெ.குமார், ஒன்றியச் செயலர் இராம.பழனிச்சாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## உழவர் பண்ணை பள்ளி பயிற்சி

உளுந்தூர்பேட்டை வட்டார வேளாண்மைத் துறை சார்பில் அட்மா திட்டத்தின் கீழ் 2012-13-ஆம் ஆண்டுக்கான உழவர் பண்ணை பள்ளி பயிற்சி பு.கிள்ளனூர் கிராமத்தில் சனிக்கிழமை நடைபெற்றது.

ஊராட்சி மன்றத் தலைவர் மாரிமுத்து தலைமை வகித்தார். வட்டார உதவி இயக்குநர் கருணாநிதி உழவர் பண்ணை பள்ளி குறித்து சிறப்புரையாற்றினார். அட்மா திட்டங்கள் குறித்து தொழில்நுட்ப மேலாளர் முத்துலட்சுமி விளக்கிக் கூறினார்.

துணை வேளாண்மை அலுவலர் அலெக்ஸாண்டர், விரிவாக்க அலுவலர் பொன்.காமராஜ், அட்மா திட்ட பொருள் சிறப்பு அலுவலர்கள் சரவணச்செல்வன், மகேந்திரன், உதவி வேளாண்மை அலுவலர்கள் அந்தோணிசாமி, தோட்டக்கலை உதவி வேளாண்மை அலுவலர் முருகன், வேளாண் விற்பனைத் துறை உதவி அலுவலர்கள் முருகன், வடிவேல்முருகன், பாலமுருகன் மற்றும் விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

## விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்ப பயிற்சி

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் வட்டார அட்மா திட்ட விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்துவது குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

திருச்சியில் நடைபெற்ற வேளாண்மை கண்காட்சியில் இப்பயிற்சி வழங்கப்பட்டது. கண்காட்சியில் விவசாய தொழில் நுட்பம் குறித்து பல்வேறு தலைப்புகளில் கருத்தரங்கு நடைபெற்றது.

தமிழ்நாடு வேளாண்மை பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம், கரும்பு ஆராய்ச்சி நிலையம், பருத்தி ஆராய்ச்சி நிலையம் மற்றும் மத்திய நெல் ஆராய்ச்சி நிலையம் சார்பில் அமைக்கப்பட்டிருந்த அரங்குகளில் விவசாயிகளுக்கான உயர் தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது.

தமிழ்நாடு வேளாண்மை பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம் சார்பிலும், திருச்சி வேளாண்மைத் துறை சார்பிலும் 100க்கும் மேற்பட்ட விவசாயக் கருவிகள் கண்காட்சியில் இடம்

பெற்றிருந்தன. மேலும் அவற்றை 50 சதவீத மானியத்தில் விவசாயிகள் பெறுவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டன.

கண்காட்சியில் இடம்பெற்றிருந்த சூரியசக்தியில் இயங்கும் மோட்டார் மற்றும் மின் உபகரணங்கள் விவசாயிகளை கவர்ந்தன. அதேபோல் கரும்பு விவசாயிகளுக்கு தேவையான கரும்பு வெட்டும் கருவிகளும் கண்காட்சியில் இடம் பெற்றிருந்தன.

நத்தம் பகுதி விவசாயிகள் இந்த கண்காட்சியைக் காண திண்டுக்கல் வேளாண் இளநிலைப் பொறியாளர் முனியப்பன் ஏற்பாடு செய்திருந்தார். இதில் நத்தம் பகுதியைச் சேர்ந்த 50 விவசாயிகளும், அட்மா வட்டார மேலாளர் பிரபு உள்ளிட்டோரும் பங்கேற்றனர்.

## மோர் மிளகாய் உற்பத்தியாளர்கள் ஆட்சியரிடம் மனு:அதிகாரிகள் இன்று பேச்சுவார்த்தை

மோர் மிளகாய் தொழிலை தொடர்ந்து நடத்துவதற்கு அனுமதிக்கக் கோரி மாவட்ட ஆட்சியரிடம் உற்பத்தியாளர்கள் திங்கள்கிழமை மனு அளித்தனர்.

திண்டுக்கல் மாவட்டம் நீலமலைக்கோட்டை அருகே உள்ள போளியம்மனூர் மோர் மிளகாய் உற்பத்தியாளர்கள், சங்கத்தின் தலைவர் எஸ். கோபி தலைமையில் மாவட்ட ஆட்சியர் ந.வெங்கடாசலத்திடம் அளிக்கப்பட்ட மனுவில் தெரிவித்திருப்பது:

கடந்த 30 ஆண்டுகளாக மோர் மிளகாய் உற்பத்தித் தொழிலை குடிசைத் தொழிலாக செய்து வருகிறோம். இதன் மூலம் சுமார் 2000 பேர் நேரடியாகவும், மறைமுகமாகவும் பயன் அடைந்து வருகின்றனர்.

இந்நிலையில், இந்த மிளகாய் தொழிலினால் விவசாய நிலங்கள் பாதிக்கப்படுவதாக தற்போது சிலர் பொய்ப் பிரசாரம் செய்து வருகின்றனர். இதுகுறித்து அவர்கள், தங்களிடமும் (ஆட்சியர்) மனு அளித்துள்ளதாக தெரிகிறது.

எனவே, இந்த நிலங்களை மாவட்ட நிர்வாகம் பார்வையிட்டு, எங்கள் தொழில் மூலம் எந்தவித பாதிப்பும், விவசாய நிலங்களுக்கு இல்லை என்பதை மாசு கட்டுப்பாட்டு வாரியம் மூலம் உறுதி செய்து, எங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படாமல் இருக்க நடவடிக்கை வேண்டும் என அந்த மனுவில் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் ந.வெங்கடாசலம் தெரிவித்தது:

இந்த பிரச்னையில் விவசாய நிலங்கள் பாதிக்கப்படுவதாக ஒரு தரப்பினரும், பாதிக்கப்படவில்லை என மற்றொரு தரப்பினரும் புகார் மனு அளித்துள்ளனர்.

எனவே, ஸ்ரீராமபுரம் பேரூராட்சிக்கு உள்பட்ட அப்பகுதியில் மாசு கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள், வேளாண்மைத்துறை அதிகாரிகள் செவ்வாய்க்கிழமை ஆய்வு மேற்கொண்டு, இருதரப்பினர் இடையே பேச்சு வார்த்தை நடத்த உள்ளனர் என்றார்.

**விவசாயிகள் முறையாக அணுகினால், அரசு அனைத்து உதவிகளையும் செய்யும்'**

விவசாயிகள் அன்பான முறையில் தங்களது பிரச்னைகள் குறித்து அணுகினால், அரசு அனைத்து உதவிகளையும் செய்து தரும் என்று விருதுநகர் மாவட்ட ஆட்சியர் டி.என். ஹரிஹரன் கூறினார்.

ஸ்ரீவில்லிபுத்தூரில் நடைபெற்ற மேற்குத் தொடர்ச்சி மலை விவசாயிகள் சங்க ஆண்டு விழா, மாவட்ட ஆட்சியர் டி.என். ஹரிஹரன் தலைமையில் நடைபெற்றது.

அரசு ஊழியர் சங்கம் (பேரூராட்சிகள் துறை) மாவட்டத் தலைவர் ஆ. காமராஜ் வரவேற்றார்.

மாவட்ட ஆட்சியர், இப்பகுதியில் வன விலங்குகளால் பாதிக்கப்பட்ட விளை நிலங்களைப் பார்வையிட்டு பேசுகையில் கூறியதாவது:

வன விலங்குகளால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, மாவட்ட வன உயிரின பாதுகாப்பாளர் தக்க நிவாரணம் பெற்றுத் தர துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மலைவாழ் மக்களின் குழந்தைகள் படிப்பதற்கு கட்டப்பட்ட பள்ளிக்கூடம் சிதிலமடைந்துள்ளது. இதனைச் செப்பனிட நடவடிக்கை எடுக்கப்படும். விவசாயிகளின் கோரிக்கையான மாம்பழச் சாறு தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்க தோட்டக்கலைத் துறை இயக்குநருக்குப் பரிந்துரை செய்யப்படும் என்றார் ஆட்சியர்.

விழாவில் மாவட்ட திட்ட அலுவலர் பிரபாகர், மாவட்ட வருவாய் அலுவலர் ராஜூ, மாவட்ட வன உயிரின பாதுகாப்பாளர் அசோக்குமார், மம்சாபுரம் பேரூராட்சி செயல் அலுவலர் ஜெயச்சந்திரசேகரன், விவசாயிகள் சங்கத்தின் நிர்வாகிகள் சமரசம், எம்.இ. முகைதீன் பிச்சை உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## பாரூர் ஏரியிலிருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறப்பு

கிருஷ்ணகிரி மாவட்டம், பாரூர் பெரிய ஏரியிலிருந்து திங்கள்கிழமை பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடப்பட்டது.

விழாவில் பங்கேற்று ஆட்சியர் டி.பி.ராஜேஷ் பாசனத்திற்காக தண்ணீரை திறந்துவிட்டு செய்தியாளர்களிடம் கூறியது:

தமிழக அரசின் உத்தரவுப்படி, தற்போது இரண்டாம் போக சாகுபடிக்கு 25.02.2013 முதல் 10.05.2013 முடிய 75 நாள்களுக்கு தண்ணீர் திறந்து விடப்படுகிறது. மேலும், பாரூர் பெரிய ஏரியின் கிழக்கு மற்றும் மேற்கு பிரதான வாய்க்கால்களில் 3 நாள்கள் தண்ணீர் விட்டு 15 நாள்கள் மதகை மூடி வைத்து முறைப்பாசனம் மேற்கொள்ளப்படுகிறது. கிழக்கு பிரதானவாய்க்காலில் வினாடிக்கு 68 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இதனால், 1583.75 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. மேற்கு பிரதான வாய்க்காலில் வினாடிக்கு 25 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இதன் மூலம், 813.57 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுவதோடு இந்த இரு வாய்க்கால்களின் மூலம் 4,729.25 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. பாரூர், அரசம்பட்டி, பெண்டரஅள்ளி, கீழ்குப்பம், பூலியூர், கோட்டப்பட்டி, ஜிங்கல்கதிரம்பட்டி, தாதம்பட்டி, விரும்பம்பட்டி ஆகிய 9 கிராமங்கள் பயன்பெறுகிறது என்றார்.

இந்த நிகழ்ச்சியில் சட்டப்பேரவை உறுப்பினர் நா.மனோரஞ்சிதம் நாகராஜ், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் கே.அசோக்குமார், ஒன்றியக் குழுத் தலைவர் ஜமுனா கிருஷ்ணன், பேரூராட்சித் தலைவர் வாசுதேவன், கோட்டாட்சியர் பி.மனோகரன், பொதுபணித் துறை செயற்பொறியாளர் ஜகந்நாதன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்

## பிப். 28-ல் விவசாயிகள் குறைகேட்பு கூட்டம்

திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் வரும் 28-ம் தேதி காலை 10.30 மணிக்கு விவசாயிகள் குறைகேட்புக் கூட்டம் நடைபெறவுள்ளது.

விவசாயிகள், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டு, நீர்ப்பாசனம், வேளாண்மை, இடுபொருள்கள், வேளாண்மை தொடர்பான கடனுதவி, விவசாய மேம்பாட்டுக்கான திட்டங்கள் குறித்து மனுக்கள் அளிக்கலாம் என மாவட்ட ஆட்சியர் ஜெயஸ்ரீ முரளிதரன் தெரிவித்துள்ளார்.

## 54 விவசாயிகளுக்கு ரூ. 1.52 கோடியில் இயந்திரங்கள்

திருச்சியில் வேளாண் பொறியியல் துறை சார்பில் 54 விவசாயிகளுக்கு ரூ. 1.52 கோடியில் மானியத்துடன் கூடிய வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை மாநிலப் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் என்.ஆர். சிவபதி திங்கள்கிழமை வழங்கினார்.

மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு ஆட்சியர் ஜெயஸ்ரீ முரளிதரன் தலைமை வகித்தார். நிகழ்ச்சியில் அமைச்சர் என்.ஆர். சிவபதி பேசியது:

காவிரி டெல்டா மாவட்டங்களில் அமைச்சர்கள் தலைமையில் ஆய்வுக்குழுவை அமைத்து, அந்தக் குழுவின் அறிக்கையின்பேரில் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 15 ஆயிரம் வழங்க முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டார்.

இதன்படி, திருச்சி மாவட்டத்தில் 21,794 ஏக்கர் நிலப்பரப்பில் சம்பா சாகுபடி செய்து பாதிக்கப்பட்ட 24,542 விவசாயிகளுக்கு ரூ. 33,70,41,705 மதிப்பில் நிவாரண உதவி வழங்கப்படுகிறது. இவற்றை வழங்கும் பணி ஞாயிற்றுக்கிழமை தொடங்கியுள்ளது.

வேளாண் பொறியியல் துறை சார்பில் கடந்த ஆண்டில் 410 விவசாயிகளுக்கு ரூ. 1.61 கோடியில் மானியத்துடன் கூடிய வேளாண் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. நிகழாண்டில், 324 இயந்திரங்கள், கருவிகள் ரூ. 2.54 கோடியில் வழங்கப்பட்டு வருகிறது.

இயந்திரங்களை கையாளுவதற்கான பயிற்சியும் உதவித் தொகையுடன் வழங்கப்படுகிறது. குறைந்த வாடகையில் 2557 விவசாயிகள் அரசு இயந்திரங்களைப் பயன்படுத்தியுள்ளனர்' என்றார் சிவபதி.

நிகழ்ச்சியில் மக்களவை உறுப்பினர் ப. குமார் வாழ்த்திப் பேசினார். எம்எல்ஏக்கள் மு. பரஞ்ஜோதி, ஆர். மனோகரன், மாவட்ட ஊராட்சித் தலைவர் டி. ராஜாத்தி, கோட்டத் தலைவர்கள் ஆர். ஞானசேகர், ஜெ. சீனிவாசன், மாமன்ற உறுப்பினர்கள் சிவசங்கர ராஜவேலு, என்.எஸ். பூபதி, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் மணவை நெடுமாறன் ஆகியோர் பங்கேற்றனர். முன்னதாக வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் ச. தியாகராஜன் வரவேற்றார். முடிவில் உதவிச் செயற்பொறியாளர் கி. ஜெயதேவன் நன்றி கூறினார்.

## அரியலூர் மாவட்டத்தில் ரூ.28.60 கோடி வறட்சி நிவாரணம்

அரியலூர் மாவட்டத்தில் 41 கிராமங்களில் வறட்சியால் பாதிக்கப்பட்ட 12,836 விவசாயிகளுக்கு ரூ.28.60 கோடி நிவாரணத் தொகை வழங்கப்படும் என்றார் மாவட்ட ஆட்சியர் ப. செந்தில்குமார்.

அரியலூர் மாவட்டம், திருமானூர் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில், வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணத் தொகை வழங்கி அவர் பேசியது:

அரியலூர் மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று டெல்டா மாவட்டத்திற்கான இழப்பீடு மற்றும் உதவிகளை இங்கும் வழங்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இனிவரும் காலங்களில் டெல்டா மாவட்டங்களுக்கான அனைத்து சலுகைகளும், அரியலூர் மாவட்டமும் பெறும்.

அரியலூர் மாவட்டத்தில் 41 கிராமங்களில் பாதிக்கப்பட்ட 12,836 விவசாயிகளின் 19,054 ஏக்கர் நிலங்களுக்கு ரூ. 28,60,95,810 நிவாரணத் தொகை வழங்கப்படுகிறது.

எனவே, பயிர் பாதிக்கப்பட்ட, சம்மந்தப்பட்ட கிராம தொடக்க கூட்டுறவு வேளாண் வங்கிகளில் கணக்குள்ள விவசாயிகளுக்கு முழுமையாக வழங்கப்பட்டுள்ளது. கணக்கில்லாதவர்கள், வங்கியில் கணக்கு தொடங்கி கணக்கு புத்தக்கத்தை அலுவலர்களிடம் வழங்கினால், நிவாரணத்தொகை பாதிக்கப்பட்ட விவசாயிகளின் கணக்கில் செலுத்தப்படும். அதேபோல, தேசிய மற்றும் தனியார் வங்கிகளில் கணக்கு வைத்திருக்கும் விவசாயிகளுக்கும் நிவாரணத்தொகை வழங்கப்படும் என்றார் செந்தில்குமார்.

நிகழ்ச்சியில், மாநிலங்களவை உறுப்பினர் ஆ. இளவரசன், கூட்டுறவுத் துறை இணைப் பதிவாளர்கள் உமாகேஸ்வரி, சிவாஜி, கோட்டாட்சியர் கணபதி, திருமானூர் ஒன்றியக் குழுத் தலைவர் சீனிவாசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### காரையூரில் விவசாயிகள் சங்கம் தொடக்கம்

பொன்னமராவதி அருகேயுள்ள காரையூரில் தமிழ்நாடு விவசாய சங்கத்தின் புதிய கிளை தொடக்க விழா அண்மையில் நடைபெற்றது.

விழாவுக்கு சங்கத்தின் ஒன்றிய நிர்வாகி எ. முத்தழகன் தலைமை வகித்தார். விவசாய சங்க மாவட்டத் தலைவர் செபஸ்தியான், ஒன்றியத் தலைவர் பி. ராமசாமி, விவசாய தொழிலாளர் சங்க ஒன்றியச் செயலர் சி. தாமரைச்செல்வன், ஒன்றிய பொருளாளர் சவுந்திரராஜன் ஆகியோர் பேசினர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

காரையூரின் மையப் பகுதியில் பொதுமக்களுக்கு இடையூறாக உள்ள டாஸ்மாக் மதுபானக் கடையை அகற்ற வேண்டும். மயான சாலையை சீரமைக்க வேண்டும். காரையூர் முத்துமாரியம்மன் கோவில் ஊருணியின் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட வேண்டும். காரையூர் மேலத்தானியம் சாலையை சீரமைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கிளைத் தலைவர் சின்னையா, செயலர் முத்தழகு, துணைச் செயலர் சுப்பிரமணியன், பொருளாளர் ராஜேந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### நவீன தொழில்நுட்பத்தில் கரும்பு சாகுபடி பயிற்சி

நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி கரும்பு சாகுபடி மேற்கொண்டால், ஹெக்டேருக்கு 250 டன் விளைச்சல் பெறலாம் என்றார் முனைவர் வி. கிருஷ்ணமூர்த்தி.

ஆலங்குடி அருகேயுள்ள வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் அண்மையில் நடைபெற்ற நீடித்த நிலைத்த தொழில் நுட்பங்கள் மூலம் கரும்பு சாகுபடி மேற்கொள்வதற்கான பயிற்சியில் அவர் மேலும் பேசியது:

குறைந்த அளவு விதை நாற்றுகள் மற்றும் குறைந்த அளவு தண்ணீரைக் கொண்டு சரியான அளவில் ஊட்டச்சத்து மற்றும் பயிர் பராமரிப்பு முறைகளைக் கொண்டுள்ளதே நீடித்த நிலைத்த கரும்பு சாகுபடியாகும்.

கரும்பு சாகுபடியில் சாதாரண முறையில் ஒரு ஹெக்டேருக்கு 90 முதல் 110 டன் வரை விளைச்சல் கிடைக்கும். இதில் நவீன தொழில்நுட்பங்களை கடைப்பிடித்தால், 220 முதல் 250 டன் வரை விளைச்சலை பெற முடியும்.

இதற்கான நாற்றுகளை புதுக்கோட்டை மாவட்டம், வடகாடு முன்னோடி விவசாயி தேவதாஸ் என்பவர் உற்பத்தி செய்கிறார். தற்போது சுமார் இரண்டு லட்சம் நாற்றுகளை அவர் உற்பத்தி செய்துள்ளார். இதேபோல், பல விவசாயிகள் நாற்று உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர். இங்கு உற்பத்தி செய்யப்படும் நாற்றுகள் பிற மாவட்டங்களுக்கும் விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன என்றார் அவர்.

முனைவர்கள் ஆ. ரேணுகாதேவி, சுவாமிநாதன், கவிதா மற்றும்  மதியழகன் ஆகியோர் பயிற்சி அளித்தனர். திரளான விவசாயிகள் பங்கேற்றனர்.

## நெல் கொள்முதல் நிலையம் திறப்பு

ஆலங்குடி அருகேயுள்ள வடகாட்டில் பருவகால நேரடி நெல் கொள்முதல் நிலையம் அண்மையில் திறக்கப்பட்டது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் சார்பில் திறக்கப்பட்ட இந்த மையத்தை ஊராட்சித் தலைவர் என். கனகராஜ் தொடக்கி வைத்தார். ஊராட்சி துணைத் தலைவர் சி. சாத்தையா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## மேட்டூர் அணை நீர்மட்டம்: 33.98 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை மாலை 33.98 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 692 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 600 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

## கடலூர் மாவட்டத்தில் விவசாயிகளுக்கு பயிர் சேத நிவாரணத் தொகை ரூ.18.22 கோடி ஒதுக்கீடு: அமைச்சர் எம்.சி.சம்பத் தகவல்

கடலூர் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பயிர் சேத நிவாரணத் தொகை வழங்க ரூ.18 கோடியே 22 லட்சத்து 86 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என தமிழக சுற்றுச்சூழல்துறை அமைச்சர் எம்.சி.சம்பத் தெரிவித்தார்.

காட்டுமன்னார்கோயில் அருகே உள்ள திருநாரையூர் கிராமத்தில் காவிரி டெல்டா பாசன விவசாயிகளுக்கு பயிர் சேத நிவாரண தொகை மற்றும் காவிரி டெல்டா சிறப்பு கூடுதல் நிவாரணம் வழங்கும் விழா நடைபெற்றது. விழாவில் 226 விவசாயிகளுக்கு நிவாரணத் தொகையை அமைச்சர் எம்.சி.சம்பத் வழங்கிப் பேசினார். அவர் பேசியது:
காட்டுமன்னார்கோயில் வட்டத்தில் 20 கிராமங்களைச் சேர்ந்த 331 விவசாயிகளுக்கும், சிதம்பரம் வட்டத்தில் 31 கிராமங்களைச் சேர்ந்த 7284 விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்கப்படும். கடலூர் மாவட்டத்தில் 51 கிராமங்களைச் சேர்ந்த 7615 விவசாயிகளின் 12152 ஏக்கர் நிலங்களுக்கும் நிவாரணத் தொகையாக ரூ.18 கோடியே 22 லட்சத்து 86 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என அமைச்சர் எம்.சி.சம்பத் தெரிவித்தார்.

விழாவிற்கு மாவட்ட ஆட்சியர் ஆர்.கிர்லோஷ்குமார் தலைமை வகித்து பேசினார். அவர் பேசியதாவது: இதுவரை கடலூர் மாவட்டத்தில் 2924 விவசாயிகளுக்கு 6 கோடியே 43 லட்சத்து 90 ஆயிரம் ரூபாய் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. கடந்த பிப்.23-ம் தேதி முதல் விவசாயிகளின் வங்கி கணக்கில் நிவாரணத் தொகை வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. எஞ்சியுள்ள

விவசாயிகளுக்கும் நிவாரணத்தொகை வழங்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது என தெரிவித்தார்.

விழாவில் கடலூர் மேற்கு மாவட்ட அதிமுக செயலர் வி.கே.மாரிமுத்து, காட்டுமன்னார்கோயில் சட்டப்பேரவை உறுப்பினர் நாக.முருகுமாறன், புவனகிரி சட்டப்பேரவை உறுப்பினர் செல்வி ராமஜெயம், உதவிஆட்சியர் எல்.சுப்பிரமணியன், குமராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் கே.ஏ.பாண்டியன், இணைப் பதிவாளர் ரேணுகாம்பாள், தனிஅலுவலர் பிருந்தா, ஊராட்சி மன்றத் தலைவர் தியாகராஜன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்
26.02.2013 A.M

---

## வறட்சி பாதிப்பால் மாட்டு தீவனமாகும் பருத்தி செடிகள்

மேட்டூர்: விலை வீழ்ச்சி, வறட்சி மற்றும் தீவன பற்றாக்குறை காரணமாக, பிஞ்சு பிடித்த பருத்தி செடிகளை கூட, விவசாயிகள் மாடுகளுக்கு தீவனமாக பயன்படுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது.பருவமழை தவறியதால், கொளத்தூர் ஒன்றியத்தில் கடும் வறட்சி நிலவுகிறது. கடந்த ஆண்டு இறுதியில், கொளத்தூர் ஒன்றியத்தில், விவசாயிகள் பரவலாக பருத்தி சாகுபடி செய்து, பாசனத்துக்கு நிலத்தடி நீரை பயன்படுத்தினர். வறட்சி நீடித்ததால், நிலத்தடி நீரும் குறைந்து விட்டது. பருத்தி செடிகளில் பிஞ்சுகள் முதிர்ச்சி அடையும் சமயத்தில், தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால், செடிகளில் பிஞ்சுகள் முதிர்ச்சியடையாமல் கருகி விட்டது.கடந்த ஆண்டு கிலோ, 60 ரூபாய்க்கு மேல் விற்பனையான ஒரு கிலோ பருத்தி கடந்த வாரம் அதிகபட்சமாக, 42 ரூபாய்க்கு விற்பனையானது. உற்பத்தி குறைந்த நிலையிலும், பருத்தி விலை மட்டும் உயரவில்லை.

தண்ணீரை விலைக்கு வாங்கி பாசனம் செய்து, பருத்தி உற்பத்தி செய்தாலும், விலை குறைவாக இருப்பதால், நஷ்டம் ஏற்படும் நிலை உள்ளது.அதே நேரம், வறட்சியால் மாடுகளுக்கும் தீவன பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனால், விலைக்கு தண்ணீர் வாங்கி பருத்தி செடிகளுக்கு பாசனம் செய்வதை விட, மாடுகளுக்கு செடிகளை தீவனமாக்கினால், தீவனம் வாங்கும் செலவு மிச்சமாகும், என விவசாயிகள் கருதுகின்றனர்.இதனால், கொளத்தூர் பகுதியை சேர்ந்த பெரும்பாலான விவசாயிகள், வளர்த்த பருத்தி செடிகளை மாடுகளுக்கு தீவனமாக பயன்படுத்துகின்றனர். வறட்சி, தீவனபற்றாக்குறை, பருத்தி விலைவீழ்ச்சி காரணமாக, சாகுபடி செய்த பருத்தி செடிகளை விவசாயிகள் மாடுகளுக்கு தீவனமாக பயன்படுத்தும் பரிதாப நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

## பாதிப்பற்ற விவசாயிக்கும் நிவாரணம்வழங்க பட்டியல்: விவசாயிகள் புகார்

தஞ்சாவூர்: "வறட்சியால் பாதிப்பற்ற விளைநிலத்துக்கு உரிய விவசாயிகளுக்கும், நிவாரணம் வழங்கும் வகையில், முறைகேடாக பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. இதை மீண்டும் ஆய்வு

செய்ய வேண்டும்' என, விவசாய சங்கத்தினர் தஞ்சை டி.ஆர்.ஓ.,விடம் மனு கொடுத்தனர். இது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.தஞ்சை கலெக்டர் அலுவலக வளாகத்தில் மக்கள் குறைதீர்க்கூட்டம் நடந்தது. இதில் டி.ஆர்.ஓ., சுரேஷ்குமார், பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றார். தமிழ்நாடு விவசாயிகள் சங்க தஞ்சை மாவட்டக்குழு செயலாளர் சாமி நடராஜன், தலைவர் காமராஜ், கரும்பு விவசாயிகள் சங்கத்தலைவர் புண்ணியமூர்த்தி, திருவோணம் ஒன்றிய செயலாளர் ராமசாமி ஆகியோர் தலைமையில், 25க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலெக்டர் அலுவலகம் வந்தனர்.

அவர்கள் டி.ஆர்.ஓ.,விடம் கொடுத்த கோரிக்கை மனுவில் கூறியிருப்பதாவது:தஞ்சை மாவட்டத்தில் சம்பா பயிர் பாதிப்பு குறித்து, மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ள கணக்கீடு குறைவாக உள்ளது. 50 சதவீதத்துக்கும் மேல் பாதிக்கப்பட்ட நிலங்கள், 12 ஆயிரம் ஏக்கர் மட்டும் தான் உள்ளது. ஒரத்தநாடு, பாபநாசம், திருவிடைமருதூர் ஆகிய ஒன்றியங்களில், ஒரு ஏக்கர் கூட வறட்சியால் பாதிக்கப்படவில்லை என, கணக்கீட்டில் தரப்பட்டுள்ளது. இது தவறானது.எனவே மீண்டும் ஆய்வு செய்து, பாதிக்கப்பட்ட விவசாயிகள் அனைவருக்கும் நிவாரணம் வழங்க, கலெக்டர் நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் திருவோணம் யூனியனுக்கு உள்பட்ட அனந்தகோபாலபுரம் கூட்டுறவு வேளாண்மை வங்கிக்கு உள்பட்ட கிராமங்களில், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்காமல், பாதிப்பில்லாத விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் பட்டியல் முறைகேடாக, தயாரிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து தாசில்தார், ஆர்.டி.ஓ.,விடம் புகார் தரப்பட்டுள்ளது. எனவே, உண்மையாக பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### பாரூர் பெரிய ஏரியில் இருந்துபாசனத்துக்கு தண்ணீர் திறப்பு

கிருஷ்ணகிரி: போச்சம்பள்ளி அடுத்த பாரூர் பெரி ஏரியில் இருந்து இரண்டாம் போக நெல் சாகுபடிக்கு நேற்று தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளதால், ஏரி பாசன விவசாயிள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.தென்பெண்ணை ஆற்றில் நெடுங்கல் தடுப்பணையில் இருந்து கால்வாய் மூலம் பாரூர் பெரிய ஏரிக்கு தண்ணீர் விடப்படுகிறது. தற்போது, பாரூர் ஏரியில் போதிய தண்ணீர் இருப்பு உள்ளதால் இரண்டாம் போக நெல் சாகுபடிக்கு உடனடியாக தண்ணீர் திறந்த விடவேண்டும் என ஏரி பாசன விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.
கோரிக்கையை ஏற்று பாரூர் பெரிய ஏரியில் இருந்து இரண்டாம் போக நெல் சாகுபடிக்கு

தண்ணீர் திறந்துவிட தமிழக அரசு உத்தரவிட்டது. நேற்று காலை பாரூர் ஏரியில் இருந்து இரண்டாம் போக நெல் சாகுபடிக்கு கலெக்டர் ராஜேஷ் தலைமையில் தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

எம்.எல்.ஏ.,க்கள் கிருஷ்ணமூர்த்தி, மனோரஞ்சிதம், மாவட்ட பஞ்சாயத்த தலைவர் அசோக்குமார், காவேரிப்பட்டணம் யூனியன் சேர்மேன் ஜமுனா கிருஷ்ணன், மாவட்ட கவுன்சிலர்கள் ரவிச்சந்திரன், சாந்தி தூயமணி, காவேரிப்பட்டணம் டவுன் பஞ்சாயத்து சேர்மேன் வாசுதேவன், ஆர்.டி.ஓ., மனோகரன், போச்சம்பள்ளி தாசில்தார் சக்தி வடிவேலு, பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் ஜெகநாதன், உதவி செயற்பொறியாளர் குமார் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.பாரூர் பெரிய ஏரியின் கிழக்கு மற்றும் மேற்கு பிரதான வாய்க்கால்களில் மூன்று நாட்கள் தண்ணீர் விட்டு, 15 நாட்கள் மதகை மூடியும் முறை வைத்து பாசனம் மேற்கொள்ளப்படுகிறது. கிழக்கு பிரதான வாய்க்காளில் வினாடிக்கு, 68 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.மேற்கு பிரதான வாய்க்காலில் வினாடிக்கு, 25 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. பாரூர் ஏரியில் இருந்து திறந்து விடப்படும் தண்ணீரால் பாரூர், அரசம்பட்டி, பெண்டரஅள்ளி, கீழ்குப்பம், புலியூர், கோட்டப்பட்டி, ஜிங்கல் கதிரம்பட்டி, தாதம்பட்டி, விருப்பம்பட்டி மற்றும் சுற்றுவட்டார கிராமங்களை சேர்ந்த, 4 ஆயிரத்து, 729 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். விவசாயிகள் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தி விவசாயம் மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட நிர்வாகம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### பயிர் காப்பீடு செய்யாத விவசாயிகளுக்கும் நிவாரணம்

கரூர்: தேசிய பயிர் காப்பீடு திட்டத்தின் கீழ், கரூர் மாவட்டத்தில் காப்பீடு செய்யாத விவசாயிகளுக்கு நிவாரணம் பெறுவதில் சிக்கல் என, நேற்று காலைக்கதிரில் செய்தி வெளியிடப்பட்டது. அதன் எதிரொலியாக, 304 விவசாயிகளுக்கு கலெக்டர் அலுவலகத்தில் நிவாரணத்தொகை வழங்கப்பட்டது.தமிழகத்தில் கடும் வறட்சி காரணமாக குறுவையைத் தொடர்ந்து, சம்பா பயிரும் பாதிப்பட்டது. இதனால், சென்னை நீங்கலாக, 31 மாவட்டங்கள், வறட்சி மாவட்டமாக அறிவிக்கப்பட்டது. மேலும் பாதிப்படைந்த பயிர்களுக்கு, பேரிடர் நிதியில் இருந்து, 5,000 ரூபாய் மற்றும், பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் வாயிலாக, 8,692 ஆயிரம் ரூபாய் என, மொத்தம், 15 ஆயிரத்து ரூபாய் நிவாரணம் வழங்கப்படும் என, முதல்வர் ஜெயலலிதா சட்டசபையில் அறிவித்தார்.

அதன் அடிப்படையில் மொத்தம், ஒரு லட்சத்து, 75 ஆயிரம் விவசாயிகளுக்கு இந்த இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும். மேலும், 50 சதவீததுக்கு மேல் பயிர் இழப்பு ஏற்பட்டிருக்கும் விவசாயிகளுக்கு உடனடியாக நிவாரணத் தொகை வழங்கப்படும். 50 சதவீததுக்கு கீழே இழப்பு இருப்பின், இழப்புக்கேற்ப நிவாரணத் தொகை வழங்கப்படும்.கரூர் மாவட்டத்தில் உள்ள காவிரி பாசன பகுதிகளான குளித்தலை, கிருஷ்ணராயபுரத்தில் வறட்சி குறித்து ஆய்வு நடத்தப்பட்டது. இதில் பாதிப்படைந்த விவசாயிகள் நிவாரணத்தொகை வழங்க தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆனால் இவர்களுக்கு தேசிய பயிர் காப்பீடு திட்டத்தின் கீழ், காப்பீடு செய்யாததால், இழப்பீடு வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது என, நேற்று காலைக்கதிரில் செய்தி வெளியிடப்பட்டது.இதையடுத்து நேற்று கரூர் கலெக்டர் அலுவலகத்தில் நடந்த குறைதீர் கூட்டத்தில், போக்குவரத்து அமைச்சர் செந்தில்பாலாஜி, வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணத்தொகை வழங்கினார்.

இதில் குளித்தலையில், ஐந்து கிராமங்களில், 152 விவசாயிகளுக்கு, 206 ஏக்கருக்கு, 30 லட்சத்து, 99 ஆயிரத்து, 750 ரூபாய் மற்றும் கிருஷ்ணராயபுரத்தில், எட்டு கிராமங்களில், 152 விவசாயிகளின், 188 ஏக்கருக்கு, 28 லட்சத்து, 25 ஆயிரத்து, 250 ரூபாய் என மொத்தம், 13 கிராமங்களைச் சேர்ந்த, 304 விவசாயிகளின், 395 ஏக்கருக்கு, 59 லட்சத்து, 25 ஆயிரம் ரூபாய் நிவாரணத்தொகை வழங்கப்பட்டு வருகிறது.நிகழ்ச்சியில் கலெக்டர் ஜெயந்தி, மாவட்ட கூட்டுறவு இணைப்பதிவாளர் சந்தானம், வேளாண் இணை இயக்குனர் தெய்வேந்திரன், ஆர்.டி.ஓ.,க்கள் நெல்லைவேந்தன், சவுந்திரவள்ளி, மாவட்ட பஞ்சாயத்து தலைவர் கீதா உட்பட பலர் பங்கேற்றனர். தற்போது காப்பீடு செய்யாத விவசாயிகளுக்கு நிவாரணத்தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. இதுகுறித்து வேளாண் அதிகாரி ஒருவர் கூறியதாவது:எந்தவித முன் அறிவிப்பு இல்லாமல் திடீரென நேற்று காலை குறைதீர் கூட்டத்தில் நிவாரணத்தொகை வழங்கப்படும் என வருவாய் துறை அதிகாரிகள் கூறினர். பின்னர் இதற்கான ஏற்படுகள் உடனடியாக செய்யப்பட்டு, அமைச்சர் வழங்கினார். மேலும் காப்பீடு செய்யாத விவசாயிகளுக்கு நிவாரணத்தொகை கொடுக்கப்பட்டு உள்ளது. இதில் காப்பீடு மூலம் வழங்கப்படும் தொகையின் செலவை அரசே ஏற்குமா? அல்லது வேறு நடவடிக்கை எடுக்கப்படுமா? என்பது இனிதான் தெரியவரும்.இவ்வாறு அவர் கூறினார்.விவசாயிகள் மனுகரூர் கலெக்டர் அலுவலகத்தில் நடந்த குறைதீர் கூட்டத்தில், நேற்று குளித்தலை யூனியனைச்

சேர்ந்த சூரியனூர், மேலப்பட்டி, பாரப்பட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த, 50க்கு மேற்பட்ட விவசாயிகள் வந்தனர்.

பின் கலெக்டர் ஜெயந்தியிடம், தங்கள் பகுதியில் வறட்சி காரணமாக பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் எங்களுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும் என, மனு அளித்தனர்."சூடான' பதில்

நிவாரணம் வழங்கும் நிகழ்ச்சியில் போக்குவரத்து அமைச்சர் செந்தில்பாலாஜி, ""பாதிக்கப்பட்ட அனைத்து பகுதி விவசாயிகள் பட்டியலை அரசு அனுப்பவில்லையா?,'' எனக் கேட்டார். அதற்கு வேளாண் அதிகாரிகள், ""முதற்கட்டமாக, 302 விவசாயிகளின், 395 ஏக்கரும், இரண்டாம் கட்டமாக, 14 ஆயிரத்து, 698 விவசாயிகளின், 369 ஏக்கர் நிலங்கள் என, மொத்தம், 15 ஆயிரம் விவசாயிகளின், 764 ஏக்கர் நிலங்களுக்கு நிவாரணம் வழங்க, பரிந்துரை செய்து பட்டியல் அனுப்பப்பட்டது. ஆனால் முதல்வர் தலைமையில் குழு ஆராய்ந்து, கொடுக்கப்பட்ட பட்டியல் படி, தற்போது நிவாரணம் வழங்கப்படுகிறது,'' எனக்கூறினர். அதிகாரிகளின் பதிலால் அமைச்சர் திருப்தி அடைந்து, அமைதியானார்.

## "வெண்டை சாகுபடிக்கு விதை பரிசோதனை அவசியம்'

காஞ்சிபுரம் : "காஞ்சிபுரம் மாவட்டத்தில், வெண்டை சாகுபடி செய்யும் விவசாயிகள், வெண்டை விதைகளைப் பரிசோதனை செய்த பிறகு, நடவு செய்ய வேண்டும்' என, காஞ்சிபுரம் விதைப் பரிசோதனை அலுவலர் பெருமாள்

தெரிவித்துள்ளார்.இதுகுறித்து, அவரது அறிக்கை:காஞ்சிபுரம் மாவட்டத்தில், மாசிபட்ட காய்கறி சாகுபடி துவக்கப்பட்டு உள்ளது. விவசாயிகள் காய்கறி சாகுபடிக்கு தயாராகி வருகின்றனர். மாசியில் வெண்டை சாகுபடி முக்கியப் பயிராகும். வெண்டை சாகுபடி செய்வோர், அதிக விலை கொடுத்து வாங்குவது விதை. தற்போது வீரிய

ஒட்டுரகங்கள் மிக அதிகமாக பயன்படுத்தப்படுகிறது. அதன் விலை அதிகமாக உள்ளது. அதிக விலை கொடுத்து வாங்கும் விதைகள், தரமானதாகவும், முளைப்புத்திறன் அதிகம் உள்ளதாகவும் இருப்பது மிகவும் அவசியம். வெண்டை யைப் பொறுத்தவரை, குறைந்தபட்ச முளைப்புத்திறன், 65 சதவீதம்இருப்பது அவசியம்.சரியான முளைப்புத் திறன் உள்ள வெண்டை விதைகளை பயன்படுத்தும் போது, ஏக்கருக்கு, 29 ஆயிரத்து 500 செடியிலிருந்து, 30 ஆயிரம் செடிகள் என, பயிர் எண்ணிக்கையை பராமரிப்பது எளிதாகும்.ஒரு ஏக்கர் நட பயன்படுத்தும் மூன்று கிலோ விதை, குறைந்தபட்சம் 65 சதவீதம் முளைப்புத்திறன் இருந்தால்தான், ஒரு ஏக்கருக்கு முழுமையாக நடவு மேற்கொள்ள முடியும். எந்தப் பயிராக இருந்தாலும், அதன் பயிர் எண்ணிக்கையை சரியாக

பராமரித்தால்தான், அதிகபட்ச மகசூலை எட்ட முடியும்.எனவே, விவசாயிகள் தங்களிடம் உள்ள விதையை பயன்படுத்துவதற்கு முன்பாக, அதிலிருந்து, 100 கிராம் அளவுள்ள விதையை எடுத்து, தங்களது முழு முகவரியுடன், விதைப்பரிசோதனை அலுவலர், விதை பரிசோதனைநிலையம், காஞ்சிபுரம், என்ற முகவரிக்கு, 300 ரூபாய் பரிசோதனை கட்டணத்துடன், நேராகவோ அல்லது தபால் மூலமாக வோ அனுப்பி, பரிசோதனை முடிவுகளைப் பெற்ற பிறகு, விதைப்பு மேற்கொண்டு பயன்பெற வேண்டும். இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 1,000 ஏக்கரில் விளைந்துள்ள நெற்பயிர்கள் கருகுகின்றன : பல்லவன்குளம் ஏரி பராமரிக்கப்படுமா?

செய்யூர் : பல்லவன் குளம் ஏரியை தூர்வாரி, மதகுகள் மற்றும் பாசன கால்வாய்களை பராமரிக்காததால், ஏரியில் நீர் கொள்ளளவு குறைந்து, 1,000 ஏக்கரில் விளைந்துள்ள நெற்பயிர்கள் கருகி வருகின்றன. மாவட்ட நிர்வாகம், போர்க்கால நடவடிக்கை எடுத்தால் மட்டுமே, வரும் பருவத்திலாவது பயிர்கள் தப்பிக்கும்.இந்த ஏரி நீரை பயன்படுத்தி, செம்பூர், பரசநல்லூர், தண்டரை, பொய்கைநல்லூர், புறஞ்சேரி, நெற்குணப்பட்டு,சோளக்கட்டு, நத்தம், பரமேஸ்வரமங்கலம், சேவூர், அணைக்கட்டுஉள்ளிட்ட கிராமங்களில் விவசாயம் நடக்கிறது.இந்த ஏரி, கடந்த 1977ம் ஆண்டில் தூர் வாரப்பட்டது. அதன்பின், பராமரிப்பு பணிகள் நடக்கவில்லை. இதனால், ஏரியில் புதர்கள் மண்டி, கொள்ளளவு குறைந்துவிட்டது. ஏரியில் உள்ள, 4 மதகுகளும் பழுதாகி விட்டன. இதனால், சேகரமாகும் மழைநீர் வெளியேறி விடுகிறது.வரத்து கால்வாய் மதுராந்தகம் ஏரியின் கலங்கலில் இருந்தும், ஜமின் எண்டத்தூர், புக்கத்துறை, கீழவளம்,தேவனூர், ஆகிய ஏரிகளில் இருந்து வெளியேறும் உபரிநீர், ஈசூர் அணையில் தேக்கி வைக்கப்படுகிறது. இந்த அணையின் ஒரு மதகு மூலம் வெளியேறும் நீர், கால்வாய் மூலம் பல்லவன் குளம் ஏரிக்கு செல்கிறது. இதற்காக, 1985ம் ஆண்டு, ஈசூர் அணைக்கட்டிலிருந்து நீலமங்கலம் கிராமம் வரை, 3 கி.மீ., நீளத்திற்கு கால்வாய் வெட்டப்பட்டது. நீலமங்கலத்திலிருந்து நெல்வாய் கிராமம் வரை, 3 கி.மீ., நீளத்திற்கு, ஒரு ஓடை வழியாக சென்று பின் அங்கிருந்து, 3 கி.மீ., கால்வாய் வழியாக பல்லவன் குளம் ஏரிக்கு செல்கிறது. இதில் நெல்வாய், நீலமங்கலம் ஆகிய இடங்களில், ரெகுலேட்டர் அமைக்கப்பட்டு உள்ளது. பல்லவன் குளம் ஏரியை தூர்வாரி, மதகுகள் மற்றும் பாசன கால்வாய்களை பராமரிக்காததால், ஏரியில் நீர் கொள்ளளவு குறைந்து, 1,000 ஏக்கரில் விளைந்துள்ள நெற்பயிர்கள் கருகிவருகின்றன.இதுகுறித்து, லத்தூர் ஒன்றிய குழு தலைவர் ஜெயசங்கரன் கூறுகையில், ""கடந்த, 36 ஆண்டுகளாக, ஏரி தூர் வாரப்படவில்லை. மதுராந்தகம் ஏரி உடைந்தபோது, ஈசூர் அணைக்கட்டிலிருந்து ஏரிக்கு வரும் கால்வாய், முற்றிலுமாக

சேதமடைந்தது, தூர்ந்து போனது. நீலமங்கலம் அருகே உள்ள ரெகுலேட்டரும் பழுதடைந்தது. அது, இதுவரை சரிசெய்யப்படவில்லை," என்றார். கருகும் பயிர்கள் மேலும், ""கால்வாய் தூர்வாரப்படாததால், ஈசூர் அணைக்கட்டிலிருந்து வரவேண்டிய நீர், வீணாக ஆற்றில் சென்று விடுகிறது. இந்த ஆண்டு, குறைந்த அளவே மழை பெய்ததால், ஏரி நீரை பயன்படுத்தி விவசாயம் செய்த, 1,000 ஏக்கர் நெல்பயிர் வீணாக கருகும் நிலை ஏற்பட்டது," என்று கூறினார்.இப்பிரச்னை, அமைச்சர், மாவட்ட ஆட்சியர் கலந்து கொண்ட ஆய்வு கூட்டத்தில் எடுத்துரைக்கப்பட்ட பின், ஈசூர் அணைக்கட்டில் இருந்து, நீலமங்கலம் வரையிலான கால்வாயில், 2.5., கி.மீ., தூரத்திற்கு மட்டும் பராமரிப்பு பணி நடத்தப்பட்டது. இதனால், தண்ணீர் தற்போது ஏரிக்கு வருகிறது என்றாலும், அந்த நீரை பயன்படுத்தி, ஒரு போகம் மட்டுமே விவசாயம் செய்ய முடியும். மீதம் உள்ள, 6.50 மீட்டர் கால்வாயையும் சரிசெய்தால் மட்டுமே, முழுமையாக விவசாயத்தில், மக்கள்ஈடுபட முடியும் என்ற நிலை ஏற்பட்டு உள்ளது.கவனிக்குமா?எனவே, மாவட்ட நிர்வாகம், போர்க்கால அடிப்படையில், மீதி கால்வாய் பகுதி யையும் தூர் வாரி பராமரிக்க வேண்டும் எனவும், ஏரியில் பழுதாகி உள்ளமதகுகளை சீர் செய்ய வேண்டும் எனவும் அப்பகுதி விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

## ஆடுகளுக்கு குடல்புழு நீக்கம் தடுப்பு ஊசி முகாம்

திருத்தணி : கடந்த இரு ஆண்டுகளில், அரசு வழங்கிய விலையில்லா ஆடுகளுக்கு, குடல்புழு நீக்கம், தடுப்பு ஊசி மற்றும் சிகிச்சை கால்நடை துறை மருத்துவர்கள், அனைத்து கிராமங்களுக்கும், நேரில் சென்று அளித்து வருகின்றனர். திருத்தணி, பள்ளிப்பட்டு, ஆர்.கே.பேட்டை மற்றும் திருவாலங்காடு ஆகிய நான்கு ஒன்றியங்களில், கடந்த, 2011-12ம் ஆண்டில், ஒரு பயனாளிக்கு, நான்கு ஆடுகள் வீதம், 850 பயனாளிகளுக்கும், 2012-13ம் ஆண்டு, 1,305 பயனாளிகளுக்கும் என, மொத்தம், 2,161 பயனாளிகளுக்கு, விலையில்லா ஆடுகள் வழங்கப்பட்டன. பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட ஆடுக

ளுக்கு சிகிச்சை அளித்தல், தடுப்பு ஊசி போடுதல் மற்றும் எத்தனை ஆடுகள் குட்டிகள் போட்டுள்ளன, எத்தனை ஆடுகள் நோயால் பாதிக்கப்பட்டு இறந்துள்ளன, என்பது குறித்து திருத்தணி கோட்ட கால்நடை துறையினர், அனைத்து கிராமங்களுக்கும், நேரடியாக சென்று ஆய்வு நடத்தி வருகின்றனர். இதுகுறித்து, திருத்தணி கால்நடை உதவி இயக்குனர், மருத்துவர் செல்லத்துரை கூறுகையில், ""கடந்த இரண்டு ஆண்டுகளில், 52 கிராமங்களில், மொத்தம், 2,161 பயனாளிகளுக்கு, 8,644 ஆடுகள் வழங்கப்பட்டு உள்ளன. இலவச ஆடுகளுக்கு, 19 கால்நடை

மருத்துவர்கள், ஆறு கால்நடை ஆய்வாளர்கள், 19 உதவியாளர்கள் உட்பட, மொத்தம், 44 பேர் கொண்ட மருத்துவ குழு, மாதத்திற்கு ஒரு முறை ஆய்வு, மூன்று மாதத்திற்கு ஒரு முறை, குடல்புழு நீக்கம் மற்றும் ஒரு ஆண்டுக்கு ஒருமுறை, தடுப்பு பூசி போன்ற, சிகிச்சைகள் அளித்து வருகின்றனர். நோயால் இறக்கும் ஆடுகளுக்கு காப்பீட்டு நிறுவனத்திடம் இருந்து, ஒரு ஆட்டுக்கு, 2,500 ரூபாய் வீதம் பெற்று தருகிறோம்" என்றார்.

## இயந்திர நடவு முறையில் நெல் பயிரிட விவசாயிகள் ஆர்வம் : செலவு குறைவதோடு மகசூலும் அதிகரிப்பு

பொன்னேரி : செலவு குறைவு, மகசூல் அதிகரிப்பு உள்ளிட்ட பயன்களால், இயந்திர நடவு முறையில், நாற்று நட நெல் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். பொன்னேரி, மீஞ்சூர் மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள 200 கிராமங்களில், விவசாயமே பிரதான தொழிலாக இருந்து வருகிறது. பணியாட்கள் பற்றாக்குறை, மின் தட்டுப்பாடு, உரிய நேரத்தில் உரம் கிடைக்காமை, பருவ காலத்தில மழை பொய்த்து போதல் என, பல்வேறு இன்னல்களுக்கு இடையே விவசாயிகள் விவசாயம் மேற்கொண்டு வருகின்றனர்.நடவு பணிக்கு... மேற்கண்ட கிராமங்களில் சம்பா, குறுவை என, ஆண்டுக்கு 26 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் நெல் பயிரிடப்படுகிறது. உள்ளூரில் ஆட்கள் கிடைக்காமல், ஆந்திர மாநிலத்திலிருந்து ஆட்களை வரவழைத்து நடவு பணிகளையும், இயந்திரம் மூலம் அறுவடை பணிகளையும் விவசாயிகள் மேற்கொண்டு வருகின்றனர்.ஒவ்வொரு பருவத்தின் போது, ஒரே நேரத்தில் விவசாய பணிகளை மேற்கொள்ளும்போது, கூலி ஆட்களுக்கு கிராக்கி ஏற்படுகிறது. இயந்திரத்தில் நடவு... இயந்திரம் மூலம் அறுவடை பணிகளை மேற்கொள்வதால், பணிகள் எளிதில் முடிவடைவதுடன், பணியாட்களை நம்பி இருக்க வேண்டிய அவசியம் தற்போது இல்லை. இதேபோல் நடவு பணிகளுக்கும், தற்போது இயந்திர உதவியை விவசாயிகள் நாடி வருகின்றனர். தற்போது, பொன்னேரியை சுற்றியுள்ள தேவராஞ்சேரி, மேட்டுப்பாளையம், அரசூர், மூலத்தாங்கல், நரசிங்கமேடு, நத்தம், சின்னகாவயம் உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள் "பின் சம்பா' பருவத்திற்காக விவசாய பணிகளில் ஈடுபட்டு உள்ளனர். அதில், இயந்திரம் மூலம் நடவு பணிகளை மேற்கொள்ளும் புதிய முயற்சியில் ஈடுபட்டு உள்ளனர். இதற்கென, பிரத்யேகமாக தயாரிக்கப்பட்ட நடவு இயந்திரத்தை, தனியார் நிறுவனம் தயாரித்து விவசாயிகளுக்கு உதவி உள்ளது. இது தட்டச்சு இயந்திரம் (டைப் ரைட்டிங் மிஷின்) செயல்படுவதுபோல், இயங்குகிறது. இது, சாதாரண நாற்றங்கால் முறையில் பயிரிடப்படாமல், அதற்கென பிளாஸ்டிக் டிரேக்களில் மணல், உரம் போன்றவற்றை போட்டு, அதில் விதை நெல் தூவி, நாற்றங்கால் விடப்படுகிறது. விதைக்கப்பட்ட நாளில் இருந்து, 15 நாட்கள் கழித்து, வளர்ந்து உள்ள நெல் நாற்றை, பிளாஸ்டிக் டிரேயுடன் எடுத்து, இயந்திரத்தின் பின்புறம் சரிவாக அடுக்கப்படுகிறது. டிராக்டர் போல் உள்ள

இந்த இயந்திரம், உழவு பணிகள் செய்யப்பட்ட வயலில், சுற்றி வரும்போது, பின்னால் உள்ள இயந்திரத்தில் இருந்து, நாற்றுகள் நிலத்தில் நேர்த்தியாக பதியப்படுகின்றன. இதனால், வேலை ஆட்கள் தேவையின்றி, குறைந்த நேரத்தில் அதிக நிலத்தில் நடவு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. செலவினம் குறைவுசாதாரண நடவு முறையில், நடவு பணிகளுக்கு, விதை நெல், உழவு பணி, நடவு பணி என, ஒரு ஏக்கருக்கு 9,000 ரூபாய் செலவிட வேண்டி உள்ளது. இயந்திரம் மூலம் மேற்கொள்ளும் நடவு பணிக்கு, 6,500 ரூபாய் இருந்தால் போதுமானது. சாதாரண நடவு பணிக்கு, ஒரு ஏக்கருக்கு நாற்று விட, 40 முதல், 50 கிலோ வரை விதை நெல்லும், நடவு கூலி, 2,800 ரூபாயும் செலவிடவேண்டும். இயந்திர நடவு பணிக்கு விதை நெல், வாடகை என, மொத்தமாக, 3,500 ரூபாய் இருந்தால் போதுமானது. செலவினம் குறைவு என்பதாலும், மகசூல் அதிகமாக கிடைக்கும் என்பதாலும், விவசாயிகள் தற்போது இயந்திர நடவு முறையில், "ஏடிடி43, 45' ரக நெல்லை பயிரிட்டு வருகின்றனர். இதுகுறித்து, பொன்னேரி பகுதி விவசாயிகள் கூறுகையில், ""ஆந்திர மாநில கூலியாட்கள், அறுவடை இயந்திரம் இல்லை எனில் விவசாயமே இல்லை. நடவு பணிகளுக்கும் இயந்திரம் கிடைத்திருப்பது, விவசாயிகளுக்கு கிடைத்த வரப்பிரசாதமாகும்," என்றார். மேலும், ""பணியாட்கள் இன்றி இயந்திரம் மூலம் நடவு பணிகள் மேற்கொண்ட சில விவசாயிகள், அதிக மகசூல் கிடைக்க பெற்றதை அறிந்தோம். அதற்காக தற்போது, நாங்களும் இயந்திர நடவு முறைக்கு ஆர்வம் காட்டி வருகிறோம்," என்று கூறினார்.

இயந்திர நடவு, சாதாரண நடவு ஓர் ஒப்பீடு

ஒரு ஏக்கருக்கு சாதாரண நடவு இயந்திர நடவு நாற்றங்கால்
பருவம் 30 முதல், 35 நாட்கள் 15 நாட்கள்
மகசூல் 25 முதல், 30 மூட்டை 35 முதல், 40 மூட்டை
நீர்ப்பாசனம் அதிகம் தேவை குறைவாக தேவை
நாற்றுக்கள் ஐந்து முதல், எட்டு இரண்டு வரை
விதை நெல் தேவை 40 முதல், 50 கிலோ எட்டு முதல், 10 கிலோ
நடவு இடைவெளி 15 து 10 செ.மீ., 22.5 து 15 செ.மீ.,
நடவு நேரம் 2 மணி நேரம் ஒரு மணி நேரத்திற்கும்
(20ஆட்கள்) குறைவு

## சின்னசேலம் ஏரிக்கு தண்ணீர் கொண்டு வரும்... புத்துயிர் கொடுக்க விவசாயிகள் கோரிக்கை

சின்னசேலம்:சின்னசேலம் ஏரிக்கு கோமுகி அணையில் இருந்து தண்ணீர் கொண்டு வருவதற் காக 97 லட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்ட திட்டம் பராமரிப்பின்றி பயனற்று போனது.

இதனால் விவசாயம் பாதிப்பு மற்றும் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.
கள்ளக்குறிச்சி அருகே சின்னசேலம் ஒன்றியத்திற்குட்பட்ட தொட்டியம், எலவடி, கல்லாநத்தம், மரவாநத்தம் உள்ளிட்ட 50க்கும் மேற்பட்ட கிராமங்களில் விவசாயமே முக்கிய தொழிலாக உள்ளது.
சின்னசேலத்தில் 98 ஹெக்டர் பரப்பளவில் அமைந்துள்ள ஏரியே இப்பகுதி விவசாய பாசனத்திற்கு நீர் ஆதாரம். ஏரியின் மூலம் 133 ஹெக்டர் நிலம் பாசனம் பெற்று வந்ததுடன், அருகே பெத்தானூர், ராயர்பாளையம், ஈசாந்தை, சிறுவத்தூர் உள்ளிட்ட 10 கிராமங்களுக்கு இங்கிருந்து தண்ணீர் சென்றது.
ஏரிக்கு மழை நீர் மட்டுமே
நீர் ஆதாரமாக இருந்ததால், கோடை காலங்களில் தண்ணீர் வற்றியது. இதனால் விவசாயம் பாதிக்கப்பட்டதுடன், நிலத்தடி நீர்மட்டும் குறைந்து குடிநீருக்கு அலையும் நிலை ஏற்பட்டு வந்தது.
அதையொட்டி ஏரியின் நீர் ஆதாரத்தை மேம்படுத்த, கல்வராயன்மலை அடிவாரத்தில் உள்ள கோமுகி அணையில் இருந்து சின்னசேலம் ஏரிக்கு தண்ணீர் கொண்டுவர முடிவு செய்யப்பட்டது. அதன்படி கடந்த 2002-03ம் ஆண்டு 97 லட்சம் மதிப்பில் தெங்கியாநத்தம் கிராமத்தில் இருந்து 4 கி.மீட்டர் நீளத்திற்கு வரத்து கால்வாய் வெட்டப்பட்டது.
கால்வாய் வெட்டப்பட்டு முதல்முறையாக கோமுகி அணையில் இருந்து ஏரிக்கு தண்ணீர் கொண்டுவரப்பட்டது. விவசாயம் பாசனத்திற்கு போதுமான நீர் கிடைத்ததுடன், நிலத்தடி நீர்மட்டம் குறையாமல் குடிநீர் பிரச்னையும் ஏற்படவில்லை.
ஆனால் நீர் வரத்து வாய்க்கால்கள் முறையாக பராமரிக்கப்படாமல் தூர்ந்துள்ளதால் திட்டம் செயலிழந்துவிட்டது. கால்வாய் வெட்டப்பட்ட 10 ஆண்டுகளில் ஒரே முறை மட்டுமே திட்டத்தால் பயன் கிடைத்தது.
கால்வாய் கரைகளில் உள்ள மண் சரியாமல் இருக்க தடுப்பு சுவர் அமைக்காததால், மழைக் காலங்களில் மண் சரிந்து கால்வாய் தூர்ந்துள்ளது.
மேலும் முட்புதர்கள் முளைத்துள்ளது, இரு கரைகளையும் சாலையாக மக்கள் பயன்படுத்தி வரும் நிலையில் கால்வாயின் அளவும் மெல்ல சுருங்கிவிட் டது. ஆங்காங்கே உள்ள தடுப்பணைகளும் பராமரிப்பின்றி உடைந்துள்ளது.
இதனால் சின்னசேலம் ஏரி வறண்டு கிடப்பதால் விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டு, பாசன பரப்பு வெகுவாக குறைந்துவிட்டது. அத்துடன் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து குடிநீர் பிரச்னை ஏற்பட்டு தண்ணீருக்கு அலையும் நிலை உள்ளது.
எனவே நல்ல நோக்கத்துடன் செயல்படுத்தப்பட்ட திட்டத்திற்கு புத்துயிர் கொடுக்க, வரத்து கால்வாய்களை தூர்வாரி சீரமைக்க பொதுப்பணித்துறை அதிகாரிகள் முன்வர வேண்டும்.

கால்வாய் தூர்வாரப்பட்டு தண்ணீர் வருவதற்கு ஏற்பாடு செய்தால் நிலத்தடி நீர்மட்டம் பாதுகாக்கப்பட்டு விவசாயம் பெருகுவதுடன், குடிநீர் பிரச்னைக்கும் தீர்வு கிடைக்கும்.

## மணிலா விலை குறைவால் விவசாயிகள் சாலை மறியல்

திருக்கோவிலூர்:திருக்கோவிலூர் மார்க்கெட் கமிட்டியில் மணிலா கொள்முதல் விலை குறைந்ததால் அதிருப்தியடைந்த விவசாயிகள் சாலை மறியலில் ஈடுபட்டனர்.
திருக்கோவிலூர் மார்க்கெட் கமிட்டிக்கு நேற்று 1400 மூட்டைகள் மணிலா ஏலத்திற்கு வந்தது. இந்த ஆண்டில் அதிகபடியான மணிலா வரத்து இது.
இந்நிலையில் சராசரியாக 4,800 ரூபாய் விலை நிர்ணயம் செய்யப்பட்டது. இது கடந்த வாரத்தைவிட மூட்டைக்கு ஆயிரம் ரூபாய் விலை குறைவு என்பதால், அதிருப்தியடைந்த விவசாயிகள் முற்பகல் 11.30 மணியளவில் திருக்கோவிலூர்-விழுப்புரம் சாலையில் மறியல் செய்தனர்.
தகவல் அறிந்த இன்ஸ்பெக்டர் ராஜேந்திரன் விரைந்து சென்று விவசாயிகளை சமாதானப்படுத்தி, அனுப்பினார். பின்னர் கமிட்டி கண்காணிப்பாளர் செந்தில்முருகன், விவசாயிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தினார்.
முன்னதாக மறியலில் ஈடுபட்ட விவசாயிகளை அவ்வழியாக வந்த சிலர் தாக்கத் துவங்கினர். இதனால் விவசாயிகள் கொதிப்படைந்தனர். இவ்வளவு பிரச்னை நடந்தபோதும், அந்த நபர்களை போலீசார் கண்டிக்காமல் வேடிக்கைபார்த்தது, விவசாயிகளை வேதனையடைய செய்தது.

## வறட்சி பாதிப்பால் மாட்டு தீவனமாகும் பருத்தி செடிகள்

மேட்டூர்: விலை வீழ்ச்சி, வறட்சி மற்றும் தீவன பற்றாக்குறை காரணமாக, பிஞ்சு பிடித்த பருத்தி செடிகளை கூட, விவசாயிகள் மாடுகளுக்கு தீவனமாக பயன்படுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது.பருவமழை தவறியதால், கொளத்தூர் ஒன்றியத்தில் கடும் வறட்சி நிலவுகிறது. கடந்த ஆண்டு இறுதியில், கொளத்தூர் ஒன்றியத்தில், விவசாயிகள் பரவலாக பருத்தி சாகுபடி செய்து, பாசனத்துக்கு நிலத்தடி நீரை பயன்படுத்தினர். வறட்சி நீடித்ததால், நிலத்தடி நீரும் குறைந்து விட்டது. பருத்தி செடிகளில் பிஞ்சுகள் முதிர்ச்சி அடையும் சமயத்தில், தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால், செடிகளில் பிஞ்சுகள் முதிர்ச்சியடையாமல் கருகி விட்டது.கடந்த ஆண்டு கிலோ, 60 ரூபாய்க்கு மேல் விற்பனையான ஒரு கிலோ பருத்தி கடந்த வாரம் அதிகபட்சமாக, 42 ரூபாய்க்கு விற்பனையானது. உற்பத்தி குறைந்த நிலையிலும், பருத்தி விலை மட்டும் உயரவில்லை.

தண்ணீரை விலைக்கு வாங்கி பாசனம் செய்து, பருத்தி உற்பத்தி செய்தாலும், விலை குறைவாக

இருப்பதால், நஷ்டம் ஏற்படும் நிலை உள்ளது.அதே நேரம், வறட்சியால் மாடுகளுக்கும் தீவன பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனால், விலைக்கு தண்ணீர் வாங்கி பருத்தி செடிகளுக்கு பாசனம் செய்வதை விட, மாடுகளுக்கு செடிகளை தீவனமாக்கினால், தீவனம் வாங்கும் செலவு மிச்சமாகும், என விவசாயிகள் கருதுகின்றனர்.இதனால், கொளத்தூர் பகுதியை சேர்ந்த பெரும்பாலான விவசாயிகள், வளர்த்த பருத்தி செடிகளை மாடுகளுக்கு தீவனமாக பயன்படுத்துகின்றனர். வறட்சி, தீவனபற்றாக்குறை, பருத்தி விலைவீழ்ச்சி காரணமாக, சாகுபடி செய்த பருத்தி செடிகளை விவசாயிகள் மாடுகளுக்கு தீவனமாக பயன்படுத்தும் பரிதாப நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

## தமிழகம், கேரளாவில் முட்டை விலை 385 காசு

நாமக்கல்: தமிழகம், கேரளாவில் முட்டை விலை, 385 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, 384 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, ஒரு காசு உயர்த்தி, 385 காசாக நிர்ணயம் செய்து, அறிவித்துள்ளது.நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) நிலவரம்:சென்னை, 381, பெங்களூரு, 375, மைசூர் 379, ஹைதராபாத் 356, மும்பை 389, விஜயவாடா 356, கொல்கத்தா 395, பார்வாலா 362, டில்லி 380.நாமக்கல்லில் நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை, 50 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை, 72 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

26.02.2013 A.M

## பருவமழை பொய்த்ததால் புல், வைக்கோலுக்கு கடும் தட்டுப்பாடு கலப்பட பால் விற்பனை அதிகரிப்பு

மதுரை, : பருவமழை பெய்யாததால் புல், வைக்கோலுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் கறவை மாடுகளை விற்கும் அவல நிலை ஏற்பட்டுள்ளது. கலப் பட பால் விற்பனை அதிகரித்துள்ளது. விவசாயத்தை அடுத்து கறவை மாடு வளர்ப்பில் தான் விவசாயிகள் அதிகள வில் ஈடுபட்டுள்ளனர். கற வை மாடு வளர்த்து வீடு களில் பால் விற்பனை செ ய்து வாழ்ந்து வருபவர்கள் ஏராளம். 'மாடு மேய்ச்சா வது பிழைத்துக் கொள்' என கிராமங்களில் கூறுவதுண்டு. ஆனால் இன்று மாடு மேய்த்து பிழைப்பதும் சிக்கலாகிவிட்டது. வைக் கோல், புல், புண்ணாக்கு மற்றும் துசி ஆகியவையே பிரதான உணவு. இதை முறையாக கொடுத்தால் மாடு வளர்ப்போருக்கு நல்லலாபம் கிடைக்கும். இத னால் கறவைமாடு வளர்ப்பை பரம்பரை தொழிலாகவே பலரும் செய்துவந்தனர். இந்த வருடம் பருவ மழை பொய்த்து விவசாயப் பணிகள் நடக்காததால் வைக்கோல் கிடைக்கவில் லை. மிஷின் மூலம் நடந்த கதிரறுப்பில் கிடைக்கும் வைக்கோலை மாடுகள் திண்பதில்லை. இதனால் வைக்கோலுக்கு கடும்பற்றா க்குறை. நிலங்களும் வறண்டதால் 'புல்' கிடைக்கவில் லை. புண்ணாக்கு மட்டுமே பிரதான உணவானது. இதன் தேவை அதிகரித்த நிலையில் அதன் விலையும் கடுமையாக உயர்ந்துள்ளது.

கடந்த 2012 அக்டோபரில் ரூ900க்கு விற்ற எள் புண்னாக்கு(60கி.மூடை) தற்போது 2 ஆயிரத்து 200 ஆக உயர்ந்துள்ளது. விலை குறைவாக கிடைத்த புண் ணாக்கை கொடுத்ததால் பாலும் குறைவாகவே கிடைத்துள்ளது. இதனால் மாடு வளர்ப்போர் இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

200 கிராம் புல் கட்டு ரூ2க்கும், வைக்கோல் (தல வானி கட்டு) ரூ30கும் (5கி) விற்க்கப்பட்டாலும் கிடைக்கவில்லை. இதனால் மாற்று வழியை தேடி குறைந்த விலைக்கு கிடைக்கும் ரேஷன் அரிசியை அரைத்து மாவாக்கி கொடுக்கின்ற னர். குறைந்த அளவில்தான் பால் கிடைக்கிறது. ரூ200 செலவு செய்தால் ரூ150 க் கும் குறைவாக பால் கிடை க்கிறது. இதனால் மாடு களை

விற்றுவிட்டு வேறு வழி தெரியாமல் பலரும் விழி பிதுங்கியுள்ளனர்.

மூன்றுமாவடியைச் சேர்ந்த செல்வக்குமார் கூறுகையில்:‘ எங்கள் பரம்பரையில் நான் 3வது தலைமுறையைச் சேர்ந்தவன். 35 கறவை மாடுகள் வைத்திருந்த என்னிடம் தற்போது 5 தான் உள்ளது. எனக்கு வேறு தொழில் தெரியாததால் வழியின்றி மாடு வளர்க்கிறேன். சிலர் லாபத்திற்காக பவுடரையும், சுடுதண்ணீரையும் பாலில் கலந்து விற்கின்றனர். சிலரோ சவ்வரிசி மாவை சேர்த்து கலப்படம் செய்து விற்கின்றனர். இதனால் பலரும் கலப்பட பாலை விலை கொடுத்து வாங்கும் நிலை உள்ளது‘என்றார்.

## தேவதானப்பட்டி அருகே விவசாயிகளுக்கு கரும்பு சாகுபடி பயிற்சி முகாம்

தேவதானப்பட்டி, : தேவதானப்பட்டி அருகே உள்ள ராஜ்ஸ்ரீ சர்க்கரை ஆலையில் கரும்பு விவசாயிகளுக்கான மூன்று நாள் பயிற்சி முகாம் நடந்தது. பயிற்சியின் ஒரு பகுதியாக வயல்வெளி செயல் விளக்கங்கள் அளிக்கப்பட்டன.

மேல்மங்கலம் முன்னோடி விவசாயி பிச்சை என்பவரது கரும்பு வயலில் நடைபெற்ற பயிற்சியில் மறுதாம்பு கரும்பு சாகுபடியில் அதிக மகசூல் எடுக்கும் தொழில்நுட்பங் கள் பற்றி விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

விவசாயி பிச்சை, தாம் ஒரு நடவு கரும்பை, தொடர்ந்து 12முறை மறுதாம்பு சாகுபடி செய்து வருவதாகவும், கரும்பு அறுவடையின் போது அடி யோடு நில மட்டத்திற்கு கரும்பு வெட்டுவது, கரும்பு அறுவடை முடிந்தவுடன் தோகைகளை பொடியாக்கி வயலில் விடுவது, தொழு உரம் இடுதல், அதிகமாக கிளைத்துள்ள பயிர்களை வாச்சாத்து கொண்டு பகிர்ந்து எடுத்து போக்கிடங்களை நிரப்பி பயிர் எண்ணிக்கைகளை பராமரித்தல், மஞ்சள் நிறமாக காணப்படும் கட்டை கரும்பில் இரும்பு மற்றும் துத்தநாக சல்பேட் நுண்ணுட்ட சத்துக்கள் தெளித்தல் மற்றும் சரியான அளவு உரங்களை உரிய நேரத்தில் இடுதல் போன்ற செய்நேர்த்திகள் மூலம் ஒவ்வொரு வருடமும் ஏக்கருக்கு 50 டன்களுக்கு மேல் மகசூல் பெறுவதாக, கூறினார்.

உதவி மேலாளர் (கரும்பு) முருகன் கூறுகை யில், இப்பகுதியில் கரும்பு சாகுபடி மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. கரும்பு சாகுபடியாளர்களுக்கு உரிய நேரத்தில் அவர்களின் தேவைகள் அறிந்து உதவி வருகிறோம். சுமார் 400 ஏக்கர் பரப்பளவிற்கு கரும்பு சாகுபடி விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. பொதுவாக இப்பகுதியில் கரும்பு சாகுபடியாளர்கள் சராசரியாக 5முறைக்கு மேல் மறுதாம்பு பயிர்களை கொண்டு செல்வார்கள். சராசரியாக ஒவ்வொரு மறுதாம்பு பயிரிலும் ஏக்கருக்கு 50 டன்களுக்கு மேல் தொடர்ந்து மகசூல் எடுக்க முடியும் என்று இப்பகுதி விவசாயிகள்

நிரூபித்துள்ளனர், என்றார்.
உசிலம்பட்டி, சாப்டூர், தேனி மற்றும் மயிலாடும்பாறை கோட்டங்களில் இருந்து விவசாயிகள் இப்பயிற்சியில் கலந்து கொண்ட னர். மேலாளர் ஜெயராம், இணை மேலாளர் வெற்றி வேல், மேலாளர் சிவாஜி கணேசன், உதவி பொது மேலாளர் தங்கராஜ், ஆண்டிபட்டி வேளாண் உதவி இயக்குனர் சந்திரசேகரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## துவரையில் கூடுதல் மகசூல் விவசாயிக்கு ரொக்கப்பரிசு

திண்டுக்கல், : பைநாற்று உள்ளிட்ட நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஏக்கருக்கு 560 கிலோ துவரை மகசூல் எடுத்ததுடன், சக விவசாயிகளிடம் இதுகுறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திய விவசாயிக்கு, அட்மா திட்ட தலைவர் வெங்கடாசலம் ரூ.4 ஆயிரம் பரிசு வழங்கி பாராட்டினார்.
வத்தலக்குண்டு வட்டாரம் சேவுகம்பட்டி கிராமத்தைச் சேர்ந்தவர் கருப்பையா. இவர் துவரை சாகுபடியில் நாற்று விடும் தொழில்நுட்பங்களை முழுமையாக கடைபிடித்ததுடன் இப்பகுதி மக்களிடமும் இதுகுறித்து விளக்கிக் கூறி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.
இவரது விளைநிலத்தில் ஏக்கருக்கு 560 கிலோ பருப்பு மகசூல் எடுத்து மீண்டும் மறுதாம்பு பயிராக கவாத்து செய்துள்ளார். 74 வயதான இவர் விவசாய பணிகளை தானே செய்து முடிப்பதுடன் புதிய தொழில்நுட்பத்தை விரிவாக்கம் செய்வதில் முக்கிய பங்காற்றியுள்ளதாக வட்டார விவசாயிகள் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனை குழு உறுப்பினர்கள், இதுகுறித்து மாவட்ட நிர்வாகத்தின் கவனத்திற்கு கொண்டு சென்றனர்.
அட்மா திட்ட தலைவரான கலெக்டர் வெங்கடாசலம், இவருக்கு ரூ.4 ஆயிரம் ரொக்கப்பரிசு கொடுத்து விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கவுரவித்தார்.
பரிசு பெற்ற விவசாயி கருப்பையாவை வேளாண் இணை இயக்குநர் சம்பத்குமார், உதவி இயக்குநர் கோபால்ராஜ் மற்றும் வட்டார வேளாண் அலுவலர்கள் உள்ளிட்டோர் பாராட்டினர்.
இதுகுறித்து கருப்பையா கூறுகையில், துவரை விதையை நேரடியாக வயலில் நடாமல் ஒரு மாதத்திற்கு முன்பே பையில் நாற்றாக வளர்த்து பின்பு வயலில் நட்டேன். நாற்றுப்பையில் எரு, உரம் இடுவதால் தண்டு, வேர் வலிமையாக இருக்கும்.
பெங்களூரு ரக துவரையையே இதற்காக பயன்படுத்தினேன். மேலும் அடியுரம், மேலுரம் இட்டதுடன் விவசாய அதிகாரிகள் கூறியபடி பயிர் பாதுகாப்பு முறைகளையும் கடைபிடித்தேன். இதனால் கூடுதல் மகசூல் கிடைத்தது. மேலும் அதே செடி தற்போது மறுதாம்பு பயிராக வளர்ந்து பூத்துள்ளது.

இதிலும் இதே அளவு மகசூல் கிடைக்கும். மொத்தம் 3 முறை இவ்வாறு அறுவடைக்கு வரும். விவசாயிகளை பாராட்டி இதுபோன்று பரிசு வழங்குவது சந்தோஷமாக உள்ளது என்றார்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

இன்றைய வேளாண் செய்திகள்

26.02.2013 A.M

## 4ஆயிரத்து 730 ஏக்கர் பாசன வசதி பெறும் பாரூர் பெரிய ஏரியில் இருந்து 2&ம் போக சாகுபடிக்கு தண்ணீர் கலெக்டர் ராஜேஷ் திறந்து வைத்தார்

கிருஷ்ணகிரி,

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி வட் டத்தில் 2-ம் போக சாகுபடிக்காக பாரூர் பெரிய ஏரியில் இருந்து நேற்று தண்ணீர் திறந்து விடப்பட் டது. கலெக்டர் ராஜேஷ் மதகை திறந்து வைத்தார். இதன்மூலம் 4ஆயி ரத்து 730 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறு கிறது.

பாரூர் ஏரி திறப்பு

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி வட்டம், பாரூர் பெரிய ஏரியில் இருந்து 2-ம் போக சாகுபடிக்கு நேற்று முதல் வருகிற 10.05.2013 வரை 75 நாட்களுக்கு தண் ணீர் திறந்துவிட பொதுப் பணித் துறை நீர்வள ஆதார அமைப்பு பாசனப் பிரிவிற்கு தமிழக முதல்- அமைச்சர் ஜெயலலிதா உத்தர விட்டு இருந்தார்

அதன்படி பாரூர் பெரிய ஏரியிலிருந்து 2-ம் போக சாகுபடிக்கு நேற்று தண்ணீர் திறந்து விடப்பட்டது. மாவட்ட கலெக்டர் ராஜேஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் கிருஷ்ணமூர்த்தி, மனோரஞ்சிதம் நாகராஜ், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் அசோக்குமார் உள்ளிட்டோர் மதகை இயக்கி சாகுபடிக்கு தண்ணீர் திறந்து விட்டனர். பின்னர் அணையிலிருந்து வெளியேறிய நீரில் நெல் மணி கள் மற்றும் பூக்களை தூவி னர்.

அப்போது, பாரூர் பெரிய ஏரியில் இருந்து வெளியேறும் தண்ணீர் ஏரியின் கிழக்கு மற் றும் மேற்கு பிரதான வாய்க் கால்களில் 3 நாட்கள் விடப் பட்டு, 15 நாட்கள் மதகை மூடி வைத்து முறைப்பாசனம் மேற் கொள்ளப்படும் என்று கலெக்டர் தெரிவித்தார்.

4,730 ஏக்கர் பாசனவசதி பெறும்

கிழக்கு பிரதான வாய்க் காலில் வினாடிக்கு 68 கன அடி வீதமும், மேற்கு பிரதான வாய்க்காலில் வினாடிக்கு 25 கன அடி வீதமும் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. ஏரிகள் மற்றும் இந்த இரு வாய்க் கால்கள் மூலம் பாரூர், அரசம் பட்டி, பென்டரஅள்ளி, கீழ் குப்பம், புலியூர், கோட்டப் பட்டி, ஜிங்கல் கதிரம்பட்டி, தாதம்பட்டி மற்றும் விருப் பம்பட்டி ஆகிய 9 கிராமங் களில் 4ஆயிரத்து 729.25 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சிக்குழு துணைத் தலைவர் அர்ச்சு ணன், ஒன்றி யக்குழு தலைவர் ஜமுனா கிருஷ்ணன், பேரூ ராட்சி தலை வர் வாசுதேவன், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்கள் ரவிச்சந்திரன், குப்புசாமி உள் பட பலர் கலந்து கொண்ட னர்.